RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 50 | பிப்ரவரி.26 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "பாஜக எனும் டப்பா எஞ்சினை நம்பி அதிமுக இருக்கிறது" : முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

நாகர்கோவில்: பிப்.26-

"பாஜக எனும் டப்பா எஞ்சினை நம்பி, அதிமுக இருக்கிறது. அதிமுக என்ற மூழ்கும் கப்பலை நம்பி, பாஜக இருக்கிறது. பூஜ்ஜியமும், பூஜ்ஜியமும் சேர்ந்தால், பூஜ்ஜியம்தான். ராஜ்ஜியம் கிடைக்காது." என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.1,785.37 கோடி செலவிலான 1,217 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 1,237 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 3,12,082 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் இன்று வழங்கினார்.

முதல்வர் ஸ்டாலின் இன்று நாகர்கோவிலில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை: உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். 2025 புத்தாண்டு பிறப்பதற்கு முன்பு நான் குமரிக்கு வந்தேன். முக்கடல் சூழக்கூடிய குமரி முனையில், முப்பால் புலவன் வள்ளுவனுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவிய பேறிவுச் சிலையின் வெள்ளிவிழாவை நாம் கொண்டாடினோம். திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்தேன். இப்போது, 2026 ல் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்கு முன்னால், அரசு விழாவில் உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

2004ல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு, நிலம் கையகம் செய்யப்பட்டு வீடுகள் கட்டி கொடுத்தாலும், அரசு நிலம் என்ற வகைப்பாட்டில் இருந்தது. சொந்த வீடுகளில் குடியிருக்கும் பயனாளிகளுக்கு வரன்முறைப்படுத்தப்பட்டு இன்று பட்டா வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, இன்று கன்னியாகுமரி வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, 40 ஆயிரத்து 86 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வளவு இருந்தாலும் உங்கள் மாவட்டத்திற்கு என்று வந்துவிட்டு, உங்களுக்கு புது அறிவிப்புகளை வெளியிடாமல் சென்றால் நன்றாக இருக்குமா? மேடையில் இருப்பவர்கள் சும்மா இருப்பார்களா! அதுவும் காங்கிரஸ் கட்சியை கேட்கவே வேண்டாம் -என்னை உரிமையோடு துளைத்து எடுத்துவிடுவார்கள். அதனால், குமரி மாவட்டத்திற்கான ஆறு புதிய அறிவிப்புகளை இப்போது நான் உங்களிடத்தில் வெளியிட இருக்கிறேன்.

முதல் அறிவிப்பு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரக்கூடிய கன்னியாகுமரி நகராட்சியின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்ய, பழையாற்றிலிருந்து கூடுதல் குடிநீர் வழங்க 28 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், முக்கடலும் சங்கமிக்கும் இந்த பகுதியில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு குளச்சல் நகராட்சி மற்றும் மண்டைக்காடு பேரூராட்சி பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், கிஷிவி கால்வாய் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு களியக்காவிளை -கன்னியாகுமரி சாலையில் அதிகமாக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதிகளில், 9 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும்.

நான்காவது அறிவிப்பு கல்குளம் வட்டம் முளகுமூட்டில் உள்ள பழம்பெரும் தூய மரியன்னை பசிலிக்கா தேவாலயம், 2 கோடி ரூபாய் செலவில், அதன் பழமை மாறாமல் புனரமைக்கப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலமாக தற்போது மீனவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்க்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் போன்ற பல்வேறு நிதி உதவிகள் அனைத்தும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கான விரிவான அரசாணைகளையும் விரைவில் வெளியிடுவோம்.



ஆறாவது அறிவிப்பு கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது, காணாமல் போகும் நேர்வில், காப்பீடு உள்ளிட்ட நிவாரணங்கள் கிடைக்கும் நாள் வரை அந்த மீனவர்களின் குடும்ப வாரிசுதாரருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித்தொகையாக மீனவர் நல வாரியம் மூலம் வழங்கப்படும்.

14 வயதிலிருந்து நான் அரசியலில் இருக்கிறேன். 50 ஆண்டு தொடர் உழைப்பால் ஒரு பேரியக்கத்தின் தலைவர் என்ற பொறுப்பை அடைந்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக மேயராக அமைச்சராக துணை முதல்வராக எதிர்க்கட்சித் தலைவராக, இன்று, முதல்வராக இருக்கிறேன்.

பெருமையோடு சொல்கிறேன். நான் செல்லாத ஊரே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு, பயணித்து, மக்களை நான் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதனால்தான், மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்து, புரிந்து ஒவ்வொரு திட்டத்தையும் தீட்டுகிறேன்.

உங்கள் எதிர்காலத்தை என்னை நம்பி தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் ஒப்படைத்திருக்கிறீர்கள். அதற்கு நான் நிச்சயமாக, உண்மையாக இருப்பேன்! உங்கள் நம்பிக்கையை காப்பாற்றுவது மாதிரி தான் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லவேண்டுமா! என் சக்திக்கு மீறி உழைத்துக் கொண்டிருக்கிறேன். வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் உழைக்கிறேன்.

ஆனால் சிலர், தேர்தல் நேரத்தில் மட்டும் உங்களை வட்டமடிப்பார்கள். தேர்தல் சீசன் என்கின்ற காரணத்தால், பிரதமர் மோடி, இனி அடிக்கடி தமிழ்நாட்டு பக்கம் வரப் போகிறார். ஏற்கெனவே வர ஆரம்பித்துவிட்டார். அதை நினைத்து, அவருடைய கூட்டணியினரே பயப்படுகிறார்கள். ஏன் தெரியுமா? எவ்வளவு அதிகமாக பிரதமர் அவர்கள் இங்கு வருகிறாரோ, அந்தளவுக்கு, பெரிய வித்தியாசத்தில், என்டிஏ கூட்டணி தோல்வி அடையும். ஏனென்றால், தமிழ்நாட்டிற்கு அவர் ஒன்றுமே செய்யவில்லை என்பது மக்களுக்கு ஞாபகம் வரும்.

நேற்றுகூட, அமைச்சரவைக் கூட்டத்தில், குஜராத் மாநில மெட்ரோ திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்கு எதுவும் இல்லை. தேர்தல் வருகிறதே என்று பட்ஜெட்டிலும் ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டிற்குச் செல்ல இருக்கிறோமே என்று அமைச்சரவைக் கூட்டத்திலும் நம்முடைய கோரிக்கைகளுக்கு ஒன்றிற்கும் கூட ஒப்புதல் தரவில்லை. அதனால் தான் நான் அடிக்கடி சொல்வேன். இந்த தேர்தல் என்பது, தமிழ்நாடு Vs NDA! தமிழ்நாடு செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்து ஆளப்படவேண்டும். டெல்லியில் இருந்து ஆளப்படக்கூடிய நிலை வரக்கூடாது. இதை தீர்மானிப்பதற்கான தேர்தல் தான் வரப்போகிற தேர்தல்.

தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் தாழ்த்தி, வீழ்த்தவேண்டும் என்று பா.ஜ.க. நினைக்கின்றது. ஏனென்றால், வளர்ச்சி இருக்கக்கூடிய மாநிலத்தில் பா.ஜ.க. இருக்காது! பா.ஜ.க. இருந்தால் அங்கே வளர்ச்சி இருக்காது. குமரி மாவட்டம் என்பது அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வரக்கூடிய மாவட்டம்! ஆனால், நாடு முழுவதும் என்ன நடந்து கொண்டிருக்கிறது? அண்மையில், கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது, இந்தியா முழுவதும் கிறிஸ்துவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மகாராஷ்டிராவில், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு ரத்து. மணிப்பூர் இன்னும் பற்றி எரிகிறது.

அசாமில் இன்னும் மோசம். அந்த மாநிலத்தின் பா.ஜ.க. முதல்வர், தான் வகிக்கும் பொறுப்பின் மாண்பையே மறந்து, முஸ்லீம்கள் மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்குகிறார். பிஹாரில், துணை முதல்வர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? பள்ளிக்கூடங்களுக்கு அருகில் இறைச்சி கடைகள் இருந்தால் அகற்றுவோம் என்று பேசியிருக்கிறார். நாம் என்ன சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்வதற்கு இவர்கள் யார்? இப்படி ஒரு நிலையை தமிழ்நாட்டிலும் கட்டவிழ்த்துவிடத்தான் அவர்கள் தவியாக தவிக்கிறார்கள்.

ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசில், மதநல்லிணக்கமும், ஒற்றுமையும் பேணப்படுகிறது. வக்பு திருத்த சட்டம், சிஏஏ ஆகியவற்றை எதிர்த்து, சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். சிறுபான்மையினர் பாதுகாப்பாக இங்கு இருக்கிறார்கள். பெரும்பான்மையினர் சகோதர உணர்வோடு இருக்கிறார்கள். அனைவரும் சமமாக நடத்தப்படுகிறார்கள்.

வரலாற்றிலேயே இல்லாத எண்ணிக்கையாக 4 ஆயிரம் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். இந்தப் பகுதியை சேர்ந்த நம்முடைய பாலபிரஜாபதி அடிகளார் என்ன பேசியிருக்கிறார் என்றால், "நம்முடைய முதல்வருக்கு சாதியும் இல்லை, மதமும் இல்லை! மொழி இருக்கிறது, இனமான உணர்வு இருக்கிறது! இது ஒரு பொற்காலம்!" என்று பேசியிருக்கிறார். வள்ளலார் அன்பர்கள் பாராட்டுகிறார்கள். உண்மையான ஆன்மீக பெரியோர்கள் பாராட்டுகிறார்கள். இதுதான் பா.ஜ.க.வின் கண்களை உறுத்திக் கொண்டே இருக்கிறது! நான் வெளிப்படையாகவே பா.ஜ.க.வினரை கேட்கிறேன்.

எப்போதுதான் நீங்கள் வன்முறையை விட்டு, வளர்ச்சியைப் பற்றி பேசுவீர்கள்? எப்போதுதான் வெறுப்பையும், பிரிவினையையும் விதைக்கின்ற முயற்சிகளை நிறுத்திவிட்டு, தமிழ்நாட்டிற்கு நல்ல விஷயம் பற்றிப் பேசப்போகிறீர்கள்? யோசிப்பீர்கள்? தொடர்ந்து தமிழ்நாட்டை குறைசொல்லி பேசுகிறீர்களே. அதற்கு முதலில், உங்களுக்கு தகுதி இருக்கிறதா? நீங்கள் ஆளுகின்ற எந்த மாநிலம் தமிழ்நாட்டை விட சிறப்பாக ஆளப்படுகிறது? தமிழ்நாட்டிற்கு வர இருக்கின்ற பிரதமர் நம்முடைய கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்வாரா?.

தமிழ்நாட்டு மீனவர்களைக் காக்க எடுத்த நடவடிக்கை என்ன? இலங்கை கடற்படையால், நம்முடைய மீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் எப்போது முடிவுக்கு வரும்? இதை தீர்த்து வைப்போம் என்று சொல்லித்தானே 12 ஆண்டுகளுக்கு முன்னால், உறுதிமொழி வழங்கிவிட்டு, வாக்குறுதி வழங்கிவிட்டு ஆட்சிக்கு வந்தீர்கள்? வெளியுறவுத் துறையும், கடற்படையும் யார் கண்ட்ரோலில் இருக்கிறது? இவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய சரியான ஆள்தான் இப்போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கக்கூடிய பழனிசாமி!

ஒருவர் நாட்டு மக்கள் எல்லோருக்கும் 15 இலட்சம் ரூபாய் தருவேன் என்று வடை சுட்ட மாதிரியே, பழனிசாமி அவர்களும் வாய்க்கு வந்தபடி வெரைட்டி வெரைட்டியாக இப்போது வடை சுட்டுக் கொண்டிருக்கிறார். இந்த வடைகளை எல்லாம் மக்கள் நம்ப தயாராக இல்லை.

இது ஒருபக்கம் என்றால், இன்னொரு பக்கம் -தேர்தலை காரணமாக காட்டி, மகளிர் உரிமைத்தொகையை மூன்று மாதத்திற்கு நிறுத்தி வைத்துவிடலாம், மக்களுக்கு தி.மு.க. அரசு மீது அதிருப்தியை கொண்டு வந்து, கெட்டப் பெயரை ஏற்படுத்தலாம் என்று சூழ்ச்சி செய்தார்கள்.

இதை அட்வான்சாக நாங்கள் தெரிந்து கொண்டு, என்னுடைய சகோதரிகளுக்கும், தாய்மார்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் பணமாக வழங்கினேன். நாம் செய்த இந்த சர்ஜிக்கல் ஸ்டிரைக்கில், மக்கள் மகிழ்ச்சி. பாவம் எதிர்க்கட்சிகள்தான் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள். முதலில், இதை கிண்டலடித்தார்கள், கொச்சைபடுத்தினார்கள். ஆனால், ஒரு கட்டத்திற்கு மேல் அவர்களாலேயே நம்முடைய அதிரடி முடிவுக்கு மக்களிடம் கிடைத்த வரவேற்பை மறைக்க முடியவில்லை. அதனால், இப்போது அதற்கு நாங்கள்தான் காரணம் என்று சொல்கிறார்கள். எங்களால்தான் நடந்தது என்று உரிமை கொண்டாட வந்திருக்கிறார்கள்.

நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லி புலம்புங்கள். எங்கள் திட்டங்கள் இப்போது ஹிட்டாகிவிட்டது!. 5 ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை சிறப்பு தொகுப்பு மக்களிடம் சூப்பர் ஹிட். ஹிட்டோ ஹிட்.

பா.ஜ.க. டப்பா எஞ்சினை நம்பி, அ.தி.மு.க. இருக்கிறது. அ.தி.மு.க. என்ற மூழ்கும் கப்பலை நம்பி, பா.ஜ.க. இருக்கிறது! பூஜ்ஜியமும், பூஜ்ஜியமும் சேர்ந்தால், பூஜ்ஜியம்தான்! ராஜ்ஜியம் கிடைக்காது! நம்முடைய திராவிட மாடல் சூப்பர் ஃபாஸ்ட் எஞ்சின். 11.19 சதவிகிதம் இரட்டை இலக்கு வளர்ச்சியோடு யாரும் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு அதிவேகமாக முன்னால் சென்று கொண்டிருக்கிறது. திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் மீண்டும் அமையும். இப்போது நாங்கள் செய்திருக்கக்கூடிய சாதனைகளை எங்களுடைய செகண்ட் இன்னிங்ஸில் நாங்களே மிஞ்சுவோம். தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சிப் பயணத்தில், ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# சென்னை ஆலந்தூரில் ரூ.8.64 கோடியில் 'முதல்வர் திருமண மாளிகை' உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை: பிப்.26-

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுத்தெருவில் 18.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.




இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "முதல்வர் ஸ்டாலினால் கடந்த 9.3.2024 அன்று அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்ட சென்னை, ஆலந்தூர் முதல்வர் திருமண மாளிகையானது 21,245 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது.

தரைதளத்தில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள், முதல் தளத்தில் உணவுக்கூடம், இரண்டாம் தளத்தில் குளிரூட்டப்பட்ட திருமணக் கூடம் மற்றும் விருத்தினர் தங்கும் அறை, மூன்றாம் தளத்தில் விருந்தினர் தங்கும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் 2 எண்ணிக்கையிலான மின்தூக்கி வசதிகள், 620 இருக்கை வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம், ஒரே சமயத்தில் 240 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடம், 40 எண்ணிக்கையிலான 4 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகள், 80 எண்ணிக்கையிலான 2 சக்கர வாகனம் நிறுத்தும் வசதிகள், சமையலறை கூடம், ஆண்/பெண் இருபாலருக்கும் நவீன கழிப்பறை வசதிகள் மற்றும் மணமகன் / மணமகள் இருபாலருக்கும் ஓய்வு அறை அமைக்கப்பட்டுள்ளது.


இந்த திருமண மண்டபத்தில் 2 எண்ணிக்கையிலான 45,000 லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் சேமிப்பிற்கான குடிநீர் தொட்டிகள், 37,000 லிட்டர் கொள்ளவு கொண்ட தீயணைப்பிற்காக மேல்நிலை தீயணைப்பு நீர்த் தொட்டிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சேமிப்பு தொட்டிகள் மற்றும் பொது உபயோகத்திற்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு காலமானார்

சென்னை: பிப்.26-

முதுபெரும் கம்யூனிச தலைவர் நல்லகண்ணு காலமானார். அவருக்கு வயது 101. அவருக்கு சிகிச்சை அளித்து வந்த சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை இதனை அறிவித்துள்ளது.

வயது முதிர்வின் காரணமாக கடந்த பல நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் அவர் காலமானார்.



இது தொடர்பாக மருத்துவமனை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "நல்லக்கண்ணு அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 01.02.2026 அன்று தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். கடந்த 24 தினங்களாக சிகிச்சையின் போது அவரது உடல் நிலையில் ஏற்றதாழ்வுகள் இருந்து வந்தது.

பல்துறை மருத்துவக்குழு தீவிர சிகிச்சையும், அதிதீவிர கண்காணிப்பையும் தொடந்து வந்தனர்.

நேற்று அதிகாலை முதல் மருத்துகளை ஏற்கும் தன்மை படிப்படியாக குறைந்து, அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது.

அதிதீவிர சிகிச்சையில் இருந்தபோதும் முக்கிய உடலுறுப்புகள் அனைத்தும் செயல் இழந்ததால் நல்லக்கண்ணு அவர்கள் 25.02.2026 அன்று பிற்பகல் 1 55 மணியளவில் நம்மை விட்டு பிரிந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

மேலும், அவரது சிகிச்சைக்கு உறுதுணையாக இருந்த அனைத்து மருத்துவக் குழுக்களுக்கும், தமிழக அரசுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**





## முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாளை முன்னிட்டு பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் அன்னதானம்

பெரும்பாக்கம், பிப். 26-

சென்னை புறநகர் மாவட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க, கழக அமைப்புச் செயலாளர், கே. சிங்காரம், மாவட்டச் செயலாளர்., கே.பி. கந்தன் வழிகாட்டுதலின் பேரில் கழக அம்மா பேரவை துணைச் செயலாளர்., பரங்கிமலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளருமான., பெரும்பாக்கம், இ.ராஜசேகர் தலைமையில் பெரும்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில் (பிப்ரவரி :24) அன்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாளை முன்னிட்டு அருஞ்சுவை விருந்து சிக்கன் பிரியாணி அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கொடியை ஏற்றி வணங்கி, முன்னாள் முதல்வர்., ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மலர் தூவி,மரியாதை செலுத்தி, வணங்கி கேக் வெட்டி பொதுமக்களுக்கு பகிர்ந்து கொடுத்து 500க்கும் மேற்பட்டோருக்கு சிக்கன் பிரியாணி அருஞ்சுவை விருந்து வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## தமிழ்நாடு அறிவியல் இயக்க காளையார்கோவில் கிளை சார்பாக தேசிய அறிவியல் தினக் கொண்டாட்டம்

காளையார் கோவில், பிப்.26-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட காளையார்கோவில் கிளை சார்பாக தேசிய அறிவியல் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். ஆசிரியை கமலம்பாய் அனைவரையும் வரவேற்றார். ஆசிரியை வாசிகி தேசிய அறிவியல் தின உறுதிமொழி கூற மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி நோபல் பரிசு பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த சர் சி வி இராமனின் வாழ்க்கை வரலாற்று சிறப்பினையும் அவரின் கண்டுபிடிப்புகளையும் சிறப்பாக எடுத்துரைத்தார். காளையார்கோவில் ஒன்றிய வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா பிப்ரவரி மாதத்திற்கான அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளான பக்க இணைப்பு தொடர் இணைப்பு நடமாடும் அரிசி காந்தத்தின் பண்புகள் முழுக்களின் பெருக்கல் கூட்டு வடிவங்களின் பரப்பளவு மற்றும் சுற்றளவு போன்ற செயல்பாடுகளை சிறப்பாக செய்து காட்டி மாணவ மாணவிகளையும் செய்து பார்க்க ஆர்வத்தை ஊட்டினார். தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகள் மழைக் கண்டறிதல் அலாரம் மின் காற்றாடி மைய விலக்கு விசையை உருவாக்குதல் மிதக்கும் எலுமிச்சை ராக்கெட் ஏவுதல் ஆக்சிஜனைக் கண்டறிதல் நிறங்காட்டி புகைப்போக்கி மின் காற்றாடி போன்ற பல்வேறு அறிவியல் ஆய்வுகளை காட்சிப்படுத்தி அனைவருக்கும் செய்து காண்பித்து விளக்கமளித்தனர். ராமன் விளைவு எனப்படும் ஒளி சிதறலைக் கண்டுபிடித்து உலகிற்கு பறைசாற்றிய இயற்பியலுக்கான நோபல் பரிசுப் பெற்ற சர் சி வி இராமனின் முகமூடி அணிந்து மாணவ மாணவிகள் புகழாரம் சூட்டினர். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி காலை சிற்றுண்டி ஒருங்கிணைப்பாளர் பஞ்சவர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 191 வது வட்டம் அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர், ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் விழா



ஜல்லடையான்பேட்டை , பிப்.26-

சென்னை புறநகர் மாவட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க, கழக அமைப்புச் செயலாளர், கே. சிங்காரம், மாவட்டச் செயலாளர்., கே.பி. கந்தன் வழிகாட்டுதலின் பேரில் 191 மாமன்ற உறுப்பினர், ஜே. எல். லட்சுமி தலைமையில் (பிப்ரவரி :24) அன்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கொடியை ஏற்றி வணங்கி, முன்னாள் முதல்வர்., ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மலர் தூவி,மரியாதை செலுத்தி, வணங்கி கேக் வெட்டி, இனிப்புகள், துப்புரவு பணியாளர்களுக்கு பணம்பரிசு வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அழகப்பா பல்கலைக்கழகத்தில் இதழியல் துறையில் பாட்காஸ்ட் மற்றும் AI: இருநாள் பயிற்சி பட்டறை தொடக்கம்




காரைக்குடி பிப்.26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை சார்பாக, "இதழியல் துறையில் பாட்காஸ்ட் மற்றும் செயற்கை நுண்ணறிவின் (AI) பங்கு" என்ற தலைப்பில் மாணவர்களுக்கான இரண்டு நாள் சிறப்பு பயிற்சி பட்டறை தொடங்கியது. RUSA 2.0 நிதி பங்களிப்புடன் நடைபெறும் இந்த நிகழ்வின் துவக்கவிழா பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.முக்கிய நிகழ்வுகள்:

நிகழ்விற்கு இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை தலைவர் முனைவர் C.ஜான்சன் வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழக துணைவேந்தர் மதிப்புறு கர்னல் முனைவர் க.ரவி தலைமை தாங்கி, பயிற்சி பட்டறையை முறைப்படி தொடங்கி வைத்து தலைமை உரையாற்றினார்.விழாவில் முக்கிய விருந்தினர்களாக: * பேராசிரியர் பாலமுருகன் (RUSA ஒருங்கிணைப்பாளர் - உயிர் தொழில்நுட்பவியல் துறை தலைவர்) பாராட்டுரை வழங்கினார். * பேராசிரியர் சந்திரமோகன் (அழகப்பா மேலாண்மை நிறுவன இயக்குநர் - நிதி அலுவலர்) வாழ்த்துரை வழங்கினார். புதிய டிஜிட்டல் தளங்கள் அறிமுகம்:இந்த விழாவின் ஒரு பகுதியாக, இதழியல் துறை மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் இரண்டு புதிய டிஜிட்டல் தளங்களை துணைவேந்தர் தொடங்கி வைத்தார்: * AU STUDIO – அதிகாரப்பூர்வ வலையொளி (YouTube) பக்கம். * AU POD-CAST – அதிகாரப்பூர்வ அலைவரிசை பக்கம். மாணவர்கள் இந்த தளங்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தி, நவீன ஊடகத் தொழில்நுட்பத்தில் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று துணைவேந்தர் அறிவுறுத்தினார். நிறைவு: நிகழ்வின் இறுதியில், இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறை உதவிப் பயிற்றுநர் மு.ஹரிபாஸ்கர் நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சி பட்டறையில் ஏராளமான மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வரும் நாட்களில் செயற்கை நுண்ணறிவு மற்றும் பாட்காஸ்ட் உருவாக்கம் குறித்த செயல்முறை விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது..

## கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் துளிர் வாசகர் சிறப்பு திருவிழா



கல்லல், பிப்.26-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக பள்ளி மாணவ மாணவிகளுக்கு துளிர் திறனறிதல் தேர்வு நடத்தப்பட்டு வருவதுடன் தேர்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஒரு வருட காலத்திற்கு ஒவ்வொரு மாதமும் விஞ்ஞான துளிர் அறிவியல் மாத இதழ் வழங்கப்பட்டு வருகிறது. தேர்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண் பெறும் மாணவ மாணவிகள் அறிவியல் மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விஞ்ஞானிகளை காண்பதற்கான வாய்ப்புகளையும் பெற்று வருகிறார்கள்.

மார்ச் 8 உலக மகளிர் தினம் கொண்டாடப்படுவதையொட்டி சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் மட்டுமே பங்கேற்ற துளிர் வாசகர் சிறப்பு திருவிழா நடைபெற்றது. இதில் அந்தப் பள்ளியில் இருந்து 100 பேர், கல்லல் சாந்தி ராணி மேல்நிலைப் பள்ளியில் இருந்து 100 பேர், கல்லல் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் இருந்து 80 , குருந்தம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இருந்து 20 மாணவிகள் என மொத்தம் 300 மாணவிகள் கலந்து கொண்டனர்.

மாணவி லக் ஷிகா வரவேற்பு நடனம் ஆடினார். கிளைத் தலைவர் தனுசு ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். விஞ்ஞான துளிர் பொறுப்பாசிரியர் பாலகிருஷ்ணன் அறிமுக உரை நிகழ்த்தினார். விஞ்ஞான துளிர் குறித்த தங்கள் அனுபவங்களை மாணவிகள் கலந்துரையாடல் மூலம் வெளிப்படுத்தினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மேனாள் தலைவர் ஸ்டீபன் நாதன் அறிவியல் கருத்துக்களை நகைச்சுவையுடன் வெளிப்படுத்தினார். தங்கள் கவிதைகள் உள்ளிட்ட படைப்புகளை மாணவிகள் ஒப்படைத்தனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேவகோட்டை சிறப்பு காவல் துணை ஆய்வாளர் கலா மாணவிகள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கம் சார் விஷயங்களையும், வாகனம் மற்றும் அலைபேசி பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வையும் மாணவிகளிடம் விளக்கிக் கூறினார். மாநில பொதுச் செயலாளர் பாதுஷா, பள்ளி தலைமை ஆசிரியர் அழகப்பன், தலைமை ஆசிரியை சாந்தி, ஆசிரியைகள் கற்பகவல்லி, அமுதா, மாரிமுத்து ,மாவட்ட செயற்குழு உறுப்பினர் சக்திவேல் வாழ்த்துரை வழங்கினர்.

கிளைச் செயலாளர் விநாயகமூர்த்தி நன்றியுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் பிரபு அறிவியல் பாடல் பாடியதுடன் நிகழ்ச்சியை ஒருங்கி ணைத்தார்.



## பெரும்பாக்கத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம்

பெரும்பாக்கம், பிப்.26-

சென்னை புறநகர் மாவட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க, பழகு அமைப்புச் செயலாளர், கே. சிங்காரம், மாவட்டச் செயலாளர்., கே.பி. கந்தன் மற்றும் கழக அம்மா பேரவை துணைச் செயலாளர்., பரங்கிமலை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரும்பாக்கம்., இ.ராஜசேகர் வழிகாட்டுதலின் பேரில் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சியில் இந்திரா நகரில் (பிப்ரவரி :24) அன்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாளை முன்னிட்டு அருஞ் சுவை விருந்து சிக்கன் பிரியாணி அன்னதானம் எம்.ஜி.ஆர்., இளைஞர் அணி பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர், பெரும்பாக்கம்., பாலு (எ) ரங்கராஜன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கொடியை ஏற்றி வணங்கி, முன்னாள் முதல்வர்., ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மலர் தூவி,மரியாதை செலுத்தி, வணங்கி கேக் வெட்டி பொதுமக்களுக்கு பகிர்ந்து கொடுத்து 500க்கும் மேற்பட்டோருக்கு சிக்கன் பிரியாணி அருஞ் சுவை விருந்து வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இளையான்குடியில் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்: புரட்சித்தலைவி அம்மாவின் 78வது பிறந்தநாள் விழா



இளையான்குடி, பிப் .26-

அஇஅதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆர். மற்றும் அம்மா ஆகியோரின் நல்லாசியுடன், அ இ அ தி மு க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க, சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் P.R. செந்தில்நாதன் MLA ஆலோசனையின்படி, இளையான்குடி பேரூர் கழகச் செயலாளர் மற்றும் 17வது வார்டு கவுன்சிலர் M.A. நாகூர் மீரா ஏற்பாட்டில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.தூய்மைப் பணியாளர்களுக்கு மதிய உணவு ஜெயலலிதா அம்மையாரின் 78வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, (24022026) செவ்வாய்க்கிழமை இளையான்குடி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு மதிய உணவு (பிரியாணி) வழங்கப்பட்டது. முன்னாள் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் S. நாகராஜன் கலந்துகொண்டு உணவினை வழங்கி சிறப்பித்தார். கலந்துகொண்ட நிர்வாகிகள் :இந்நிகழ்ச்சியில்: * M.A. நாகூர் மீரா (பேரூர் கழகச் செயலாளர்) * K.M. கோபி (வடக்கு ஒன்றிய செயலாளர், விருதுநகர் மண்டல தகவல் தொழில்நுட்பப் பிரிவு தலைவர்) * A. பாரதிராஜன் (தெற்கு ஒன்றிய செயலாளர்) * K. ஈஸ்வரன் (கிழக்கு ஒன்றிய செயலாளர்) * K. குழந்தை (மாவட்ட தகவல் தொழில்நுட்ப செயலாளர்) * உதய்சந்திரன் (அம்மா பேரவை இணைச் செயலாளர்) * K.S. டேவிட் (மாவட்ட தகவல் தொழில்நுட்ப தலைவர்) மேலும், தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், முன்னாள் சேர்மன் முனியாண்டி, மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் மலைச்சாமி, பேரூர் கழக அவைத்தலைவர் V.S.H. அபுபக்கர், மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் ஹாஜி. H. சையது இப்ராஹிம், மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் ஹாஜி. மௌலா செய்யது, மாவட்ட சிறுபான்மைப்பிரிவு துணைச் செயலாளர்கள் வி. செய்யது அன்சாரி, S. அபுல் காலாம் ஆசாத், மாவட்ட விவசாயப் பிரிவு M. திருநாவுக்கரசு, மாவட்ட இலக்கிய அணி துணைச் செயலாளர் M. செல்வகுமார், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் தெய்வேந்திரன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணைத்தலைவர் V. ஆனந்த்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் மீரான் கனி, S. தாவூத் பாட்சா, புதூர் அயூப் கான், கலீல் அஹமது, ஸி. பாக்யராஜ், மைதீன், அரசு, இஸ்மத் அல்லாஹிர், காளீஸ்வரி, காரிசாமி, செந்தில் குமார், சீமைச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

# தமிழக வெற்றிக் கழகத்தின் எழுச்சிமிகு பரப்புரை: சிவகங்கையில் ‘விசில்’ சின்னத்திற்கு மக்கள் உற்சாக வரவேற்பு



சிவகங்கை, பிப்.26-

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், மக்களின் மனம் கவர்ந்த முதல்வர் வேட்பாளருமான விஜய் அறிவுறுத்தலின்படி, தமிழகம் முழுவதும் அக்கட்சியினர் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் சிவகங்கை தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து பாரதி மற்றும் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் தமிழரசி ஆகியோரின் ஆலோசனையின்படியும், மாவட்ட செயற்குழு உறுப்பினர் தாமரை பாண்டியன் வழிகாட்டுதலின்படியும் சிவகங்கை நகரப் பகுதிகளில் இன்று சிறப்பான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.வீதி வீதியாக ‘விசில்’ சத்தம் – மக்கள் பேராதரவு

சிவகங்கை நகரத்திற்கு உட்பட்ட காளவாசல் மற்றும் மீனாட்சி நகர் ஆகிய பகுதிகளில், நகர மகளிரணி அமைப்பாளர் இராஜேஸ்வரி தலைமையில் கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தனர்.*சின்னம் அறிமுகம்: தவெகவின் வெற்றிச் சின்னமான 'விசில்' சின்னத்தை பொதுமக்களிடம் அறிமுகப்படுத்தி, அதன் முக்கியத்துவத்தை விளக்கினர். * வாக்குச் சேகரிப்பு: தமிழகத்தின் விடியலுக்காகவும், ஆட்சி மாற்றத்திற்காகவும் தளபதி அவர்களுக்கு ஆதரவு தருமாறு துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாக்குக் கேட்டனர். * கருத்துக்கணிப்பு: பரப்புரையின் போது பொதுமக்களிடம் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், தற்போதைய அரசியல் சூழலில் ஒரு மாற்றத்தை மக்கள் ஆவலோடு எதிர்பார்ப்பது உறுதியானது. நிச்சயம் கிட்டும் வெற்றி!

இந்த நிகழ்வின் போது, பொதுமக்கள் தளபதி விஜய் மீதும், தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைகள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருப்பதை காண முடிந்தது. "மக்கள் மனதில் ஆட்சி மாற்றம் தேவைப்படுகிறது என்பது இன்றைய பரப்புரையின் மூலம் தெளிவாகப் புரிந்தது, வெற்றி நிச்சயம்" என நிர்வாகிகள் உற்சாகத்துடன் தெரிவித்தனர். இந்த பரப்புரை நிகழ்வில் சிவகங்கை நகர மகளிரணி அமைப்பாளர்,

இராஜேஸ்வரி மற்றும் நகர மகளிரணி இணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்புவனம் அரசு மருத்துவமனையில் அவலம்: நோயாளியின் காயத்திற்குத் தூய்மைப் பணியாளர் சிகிச்சை அளிக்கும் அதிர்ச்சி வீடியோ

திருப்புவனம், பிப்.26-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அரசு மருத்துவமனையில், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணியில் இல்லாத நிலையில், தலையில் காயமடைந்த நோயாளிக்குத் தூய்மைப் பணியாளர் சிகிச்சை அளிக்கும் காட்சிகள் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

சம்பவத்தின் பின்னணி:

திருப்புவனம் அருகே உள்ள பெத்தானந்தல் கிராமத்தைச் சேர்ந்த வரதராஜன் என்பவருக்குத் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதற்காக அவர் சிகிச்சை பெற (24.02.2026) பகல் வேளையில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

அங்குச் சிகிச்சையளிக்க வேண்டிய மருத்துவரோ அல்லது செவிலியர்களோ அந்த நேரத்தில் பணியில் இல்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அவசரச் சிகிச்சை பிரிவில் இருந்த வரதராஜனுக்கு, அங்கிருந்த தூய்மைப் பணியாளராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பெண் ஒருவர் சிகிச்சை அளித்துள்ளார்.

வெளியான வீடியோ:

இது தொடர்பான வீடியோவில், தூய்மைப் பணியாளர் மருந்துகளை எடுத்து வரதராஜனின் காயத்திற்குச் சிகிச்சை அளிப்பது தெளிவாகத் தெரிகிறது.



"மருத்துவர்களும் செவிலியர்களும் எங்கே?" என்று அங்கிருந்தவர்கள் கேட்டபோது, அவர்கள் உரியப் பதில் கூறவில்லை எனத் தெரிகிறது. தூய்மைப் பணியாளர் எவ்வித மருத்துவப் பயிற்சியும் இன்றி, நோயாளியின் உயிருக்கு ஆபத்தான முறையில் சிகிச்சை அளித்தது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கறிஞர் பா.இராஜா கோரிக்கை:

இந்தச் சம்பவம் குறித்து திருப்புவனத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் பா.இராஜா கூறுகையில், "அரசு மருத்துவமனைகளில் ஏழை எளிய மக்கள் தங்கள் உயிரைக் காக்கவே வருகின்றனர். ஆனால், மருத்துவப் பணியாளர்கள் பணியில் இல்லாதபோது, தூய்மைப் பணியாளர்கள் மூலம் சிகிச்சை அளிப்பது கண்டிக்கத்தக்கது. இது நோயாளிகளின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயலாகும். எனவே, பணியில் இல்லாத மருத்துவர் மற்றும் செவிலியர்கள் மீது துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்பு:

கிராமப்புறங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இதுபோன்ற அலட்சியப் போக்குகள் தொடர்ந்து நடைபெறுவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. மாவட்ட நிர்வாகமும், சுகாதாரத் துறையும் உடனடியாகத் தலையிட்டு, திருப்புவனம் அரசு மருத்துவமனையின் செயல்பாடுகளைச் சீரமைக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.






## சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள

# 48 பாதுகாப்பு குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சிக் கூட்டம்

திண்டுக்கல் பிப்.26-

சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள 48 பாதுகாப்பு குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சிக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் கூறுகையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, எதிர் வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கும், ஒரு தொகுதிக்கு ஒரு அலுவலர் மற்றும் இரண்டு. காவலர்கள் உள்ளடக்கிய மூன்று பாதுகாப்பு குழுக்களுக்கும், கொடைக்கானல் வட்டத்திற்கு மட்டும் தனியே ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பறக்கும் படையில் (Flying Squad)-24 குழுக்களும், நிலையான நிலைக்குழுவில் (Static Surveillance)-24 குழுக்களும் ஆகமொத்தம் 48 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள 48 பாதுகாப்பு குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சிக் கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டன. தொடர்ந்து, 48 பாதுகாப்பு குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் காவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தெரிவித்தார்.

இப்பயிற்சி கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமலை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தராஜகுரு, மாவட்ட வழங்கல் அலுவலர் அன்பழகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுகுமாறன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.ஹென்றி பீட்டர் அவர்கள் ஆகியோர் உட்பட ஆத்தூர், நிலக்கோட்டை, நத்தம் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# பூண்டி ஒன்றிய அதிமுக சார்பில் முன்னால் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாள் விழா

திருவள்ளூர், பிப்.26-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியங்களில் அதிமுக சார்பில் 24.02.2026 அன்று பகல் 12.00 மணியளவில் பென்னாலூர்பேட்டை சித்தஞ்சேரி, கச்சூர், போந்தவாக்கத்தில் முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் 78 வது பிறந்தநாள் விழா ஒன்றியசெயலாளர்கள் B.M.பிரசாத், E.k.கோதண்டன், V.S.வேதகிரி மற்றும் பூண்டி ஒன்றிய முன்னால் சேர்மன் B.V.வெங்கட்ரமணா மகேந்திரன் சுதாகர் முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் அம்மா பேரவை மாவட்ட செயலாளருமான. கே.எஸ்.விஜயகுமார் கலந்துகொண்டு ஜெயலலிதா அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்

இந்த நிகழ்வில் கும்முடிபூண்டி நகரசெயலாளர் மு.க.சேகர், மாவட்ட இளைஞரணி துணைச்செயலாளர் மெய்யூர் மதன்குமார்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணைசெயலாளர் சுரேஷ்,மற்றும் மாம்பாக்கம் வேலு மற்றும் இளங்கோவன் கூனிப்பாளையம் அன்பு, பூண்டி ஒன்றிய சிறுபாண்மை பிரிவு செயலாளர் சி.தமிழ்மணி, பூ.ஒ.மா.அ.செ.சதீஷ்ஈஸ்வரன்,பூ.ஒ.அ.பே. செயலாளர்பழனி, இணைச்செயலாளர் சரவணன் போந்தவாக்கம் கிளை செயலாளர் D.ராஜன், த.தொ.நு.அ.செயலாளர் உத்ரகுமார், பிரதாப்,நாகையா, மாவ. மிபி.நிதி.V.ராஜா கோவிந்தசாமி செஞ்சையா கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# 2 ஆண்டுகளாக அலைக்கழிப்பு: உதவித்தொகை கிடைக்காமல் தவிக்கும் மாற்றுத்திறனாளி நெசவாளர்

திருத்தணி, பிப்.26-

திருவள்ளூர் மாவட்டம், மத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணி (62). முன்னாள் நெசவுத் தொழிலாளியான இவர், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உடல்நலக் குறைவால் இரண்டு கால்களும் செயலிழந்து, வாய் பேசும் திறனையும் இழந்துள்ளார்.

மருத்துவச் சான்று பெற்றும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாத உதவித்தொகை (₹1,500) வேண்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக திருத்தணி வட்டாட்சியர் அலுவலகத்திற்குத் தனது மனைவியுடன் அலைந்து வருகிறார்.

போக்குவரத்து வசதியற்ற ஊரிலிருந்து 27 கி.மீ. பயணம் செய்து வரும் இவர்களை, சமூக பாதுகாப்புத் திட்டத்



தனி வட்டாட்சியர் தேவி மற்றும் அங்கிருக்கும் அதிகாரிகள் மிரட்டித் திருப்பி அனுப்புவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

பசியும் வறுமையும்: "சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கண்ணீர் மல்க அதிகாரிகளிடம் முறையிட்டும், அவர்கள் கல்நெஞ்சத்துடன் நடந்து கொள்கிறார்கள்" என சுப்பிரமணியின் மனைவி பூங்கோதை செய்தியாளர்களிடம் ஆவேசமாகத் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் மற்றும் ஊடகவியலாளர்களையும் அதிகாரிகள் உள்ளே விடாமல் தடுத்து மிரட்டியுள்ளனர்.

இயலாதவர்களுக்கு உதவ வேண்டிய அரசுத் துறை, தகுதியுள்ள ஒருவரை இரண்டு ஆண்டுகளாக அலைக்கழிப்பது சமூக ஆர்வலர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழக அரசு தலையிட்டு இவருக்கு உடனடியாக உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

# திருத்தணி அருகே தோழியின் தந்தையால் சிறுமிக்கு பாலியல் தொல்லை: நெசவுத் தொழிலாளி போக்சோ சட்டத்தில் கைது

திருத்தணி, பிப்.26-

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம் பொதட்டூர்பேட்டை அருகே அரசுப் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த நெசவுத் தொழிலாளியைப் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பொதட்டூர்பேட்டை பகுதியில் உள்ள அரசுப் பள்ளியில் 13 வயது சிறுமி ஒருவர் 8ம் வகுப்பு பயின்று வருகிறார். அதே வகுப்பில் படிக்கும் தனது தோழியின் தந்தை செந்தில்குமார் என்பவருடன், அந்தச் சிறுமி இருசக்கர வாகனத்தில் ஒன்றாகச் சென்றுள்ளார்.

அரசு உதவித்தொகை பெறுவதற்காகச் சில ஆவணங்களை ஜெராக்ஸ் எடுக்க வேண்டும் என்று அச்சிறுமி செந்தில்குமாரிடம் தெரிவித்துள்ளார். இதன்பேரில், செந்தில்குமார் தனது மகளை ஓரிடத்தில் இறக்கிவிட்டுவிட்டு, அந்தச்



சிறுமியை மட்டும் அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் உயிருடன் இல்லாத நிலையில், அவர் தனது பெரியப்பாவின் பராமரிப்பில் இருந்து வந்துள்ளார். சம்பவத்தன்று வீட்டில் பெரியப்பாவும் இல்லாததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட செந்தில்குமார், ஆவணங்களை எடுப்பதற்காக வீட்டிற்குள் சென்ற சிறுமியிடம் அநாகரீகமாக நடந்து கொண்டு பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார்.

அவரிடமிருந்து தப்பித்த சிறுமி, நடந்தவற்றைத் தனது தோழியிடமும், பள்ளியில் உள்ள மற்றொரு மாணவியிடமும் அழுதுகொண்டே தெரிவித்துள்ளார். உடனடியாக அவர்கள் 'சைல்ட் ஹெல்ப்லைன்' எண்ணிற்குத் தொடர்பு கொள்ள முயன்றனர். இணைப்பு கிடைக்காததால், பள்ளியில் உள்ள ஆசிரியரிடம் விவரத்தைக் கூறியுள்ளனர்.

ஆசிரியர் அளித்த தகவலின் பேரில், சிறுமியின் பெரியப்பா திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரைப் பெற்றுக் கொண்ட காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து, தலைமறைவாக இருந்த நெசவுத் தொழிலாளி செந்தில்குமாரைப் போலீசார் போக்சோ (POCSO) சட்டத்தின் கீழ் கைது செய்தனர். திருவள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், நீதிபதியின் உத்தரவின் பேரில் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

## சிங்க வாகனத்தில் உற்சவர் முருகப்பெருமான் திருக்கோயில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் வாகன சேவையில்

# கிழிந்த வண்ண பட்டு குடைகள் சாமிக்கு வைக்கப்பட்ட சம்பவம் காலதாமதமாக சாமி ஊர்வலம் புறப்பட்ட சம்பவம் திருக்கோயில் நிர்வாகத்தின் மீது பக்தர்கள் குற்றச்சாட்டு

திருத்தணி, பிப்.26-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் முருகப்பெருமானின் பிரசித்தி பெற்ற ஐந்தாம் படை திருக்கோயில் ஆகும்

இந்த திருக்கோயில் மாசி பெருவிழா பிரம்மோற்சவ நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது

இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது என்று கோயில் நிர்வாகம் போதிய விளம்பரங்களை பக்தர்களுக்கு தெரியும் வண்ணம் எந்த ஒரு முன்னேற்பாடுகளும் செய்யவில்லை என்று முருகு பக்தர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்

மேலும் இந்த மாசி பெருவிழா நிகழ்ச்சியில் உற்சவர் முருகப்பெருமான்



சிறப்பு வெள்ளி கவச அலங்காரம் சிறப்பு புஷ்ப அலங்காரம் செய்யப்பட்டு மகா தீப ஆராதனை காண்பிக்கப்பட்டு பல்லக்கு சேவையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு

திருக்கோயில் மாட வீதியில் சிங்க வாகனத்தில் உற்சவர் முருகப்பெருமான் எழுந்தருளினார்

கோயில் நிர்வாகம் அறிவிக்கப்பட்ட நேரத்தை விட ஒரு மணி நேரத்திற்கு மேலாக காலதாமதமாக இந்த வாகன சேவை சிங்க வாகனத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை தாயாருடன் எழுந்தருளி திருக்கோயில் மாடவீதியில் ஒரு சுற்றுகள் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்

இந்த நிகழ்வின் போது மிகவும் காலதாமதம் ஏற்பட்டதால் பக்தர்கள் கோயில் நிர்வாகத்தின் மீது குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர் அறிவிப்பது நேரம் ஒன்றாகவும் வாகன சேவை புறப்பாடு காலதாமதம் ஏற்பட்டுள்ளது இதனை சரி செய்ய வேண்டிய கோயில் நிர்வாகம் வேடிக்கை பார்த்ததாகவும் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர் மேலும்

வாகன சேவையில் சிங்க வாகனத்தில் முருகப்பெருமான் வந்த பட்டு வண்ண குடைகள் கிழிந்த வண்ணம் இருந்ததை கண்டு பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர் ஒரு திருக்கோயில் நிர்வாகம் முருகப்பெருமானுக்கு வாகன சேவையில் கிழிந்த குடைகள் வைத்திருந்ததை ஏன் சரிவை செய்யவில்லை என்று முருக பக்தர்கள் கோயில் நிர்வாகத்திடம் கேள்வி எழுப்பி உள்ளனர்

மாசி பிரம்மோற்சவம் நிகழ்ச்சி திருத்தணியில் உள்ள பக்தர்களுக்கு கூட இந்த தேதியில் தொடங்கி நடைபெற்று வருகிறது என்று போதிய விளம்பரங்களும் போதிய தகவல் பரிமாற்றத்தையும் கோயில் நிர்வாகம் சரிவர செய்யவில்லை என்று முருக பக்தர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

# கிருஷ்ணகிரியில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம் அசோக் குமார் எம்எல்ஏ பங்கேற்பு





கிருஷ்ணகிரி, பிப். 26-

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாள் விழா மாவட்டம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க., அலுவலகம் முன்பு, ஜெயலலிதாவின் படத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ., மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கட்சியினர் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இதே போல், கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகில் நகர அ.தி.மு.க., சார்பில், நகர செயலாளர் கேசவன் தலைமையில், கிழக்கு ஒன்றியம் சார்பில் கிட்டப்பட்டியில் எம்.ஜி.ஆர்., நினைவாக கட்டப்பட்ட சமாதி அருகே, ஒன்றிய செயலாளர் கண்ணியப்பன் தலைமையில், கிருஷ்ணகிரி அடுத்த பெத்ததாளாப்பள்ளியில், மேற்கு ஒன்றிய செயலாளர் சோக்காடி ராஜன் தலைமையில், பழைபேட்டை ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் நகர துணை செயலாளர் குரு தலைமையில், புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில் மாவட்ட மாணவரணி செயலாளர் ராகுல் தலைமையில், காந்தி சிலை அருகே மாவட்ட இளைஞரணி செயலாளர் கார்த்திக் தலைமையில் நடந்த ஜெயலலிதா பிறந்த நாள் விழாவில், கிழக்கு மாவட்ட செயலாளர் அசே௱க்குமார் எம்.எல்.ஏ., ஜெயலலிதாவின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, 2,000க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானத்தை வழங்கி துவக்கி வைத்தார்.

மேற்கு ஒன்றியம் சார்பில், கட்சி பிரமுகர் அப்பாதுரை தலைமையில் கங்கலேரி கிராமத்தில், 1,000 பேருக்கு வேட்டி சேலையை அசோக்குமார் எம்.எல்.ஏ., வழங்கி பேசினார். அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி தலைமையில், கொய்யாங்கொட்டாய் கிராமம் மற்றும் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன் தலைமையில் ஜெகதேவியில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதில், மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் முனிவெங்கடப்பன், மனோரஞ்சிதம் நாகராஜ், மாநில மகளிர் அணி துணைத் தலைவி பரிதா நவாப், எம்.ஜி.ஆர்., மன்ற மாவட்ட செயலாளர் தென்னரசு, அதிமுக பிரமுகர் நவாப், மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் மக்பூல்,அம்மா பேரவை மாவட்ட தலைவர் தங்கமுத்து, ஒன்றிய செயலாளர் சூர்யா,

முன்னாள் நகர எம்.ஜி.ஆர்., இளைஞரணி செயலாளர் சரவணன், ஐ.டி., பிரிவு மண்டல தலைவர் ராஜசேகர் உள்பட பலர் பங்கேற்றனர்.

# தாராபுரத்தில் தொழில் முனைவோர்களுக்கு தி.மு.க கருத்தரங்கு - கோரிக்கைகள் விரைவில் தீர்வு காணப்படும்: அந்தியூர் செல்வராஜ் உறுதி




திருப்பூர், பிப்.26-

திருப்பூர் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புறவழிச் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் மற்றும் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறியும் சிறப்பு கூட்டம் நடைபெற்றது, இதில் கழக துணைப்பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும் கழக துணைப்பொதுச் செயலாளருமான மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சரும் மகளிரணி துணைச் செயலாளருமான என்.கயல்விழி செல்வராஜ், இளைஞரணி துணைச் செயலாளரும் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்று உரையாற்றினர், கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், சிறு மற்றும் குறு தொழில் முனைவோர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தாராபுரம் பகுதியில் புதிய தொழில்கள் தொடங்குவது, ஏற்கனவே இயங்கி வரும் தொழில்களை மேம்படுத்துவது, தொழில் முனைவோர்கள் எதிர்நோக்கும் நிதி பற்றாக்குறை, கட்டமைப்பு வசதிகள், அரசு அனுமதி தொடர்பான சிக்கல்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது, சிறு தொழில்களுக்கு அரசின் சலுகைகள் மற்றும் புதிய தொழில் கொள்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது, தொழில் முனைவோர்களுக்கு அரசு முழு ஆதரவு வழங்கும் என்றும் அவர்களின் கோரிக்கைகள் கட்டாயம் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தியூர் செல்வராஜ் உறுதியளித்தார்.

இதில் கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநில தலைவர் காளிமுத்து, உப்பாறு அணைக்கு அமராவதி அணையிலிருந்து புதிய கால்வாய் வழித்தடம் அமைத்து ஆண்டு முழுவதும் தண்ணீர் கொண்டு வர வேண்டும் என கோரிக்கை வைத்தார், இதற்கு கொங்கு நாடு மக்கள் கட்சியைச் சேர்ந்த ஈஸ்வரன், தற்போதைய அரசு அணையின் கொள்ளளவை உயர்த்தும் வகையில் தண்ணீர் வழங்கியுள்ளதாகவும், நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்தார்.

பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் சார்பில் என்.ஏ.ஹச். சுலைமான் பேசுகையில், தாராபுரம் புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள மேம்பாலத்தை பூளவாடி சாலை முதல் அலங்கியம் ரவுண்டானா சிக்னல் வரை நீட்டிக்க வேண்டும் என வலியுறுத்தினார், நல்லதங்காள் ஓடை அணைக்கு அமராவதி ஆற்றில் இருந்து ஆண்டுதோறும் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூலனூர் ஒன்றிய தி.மு.க செயலாளர் துறை தமிழரசு கோரிக்கை வைத்தார், இதற்கு அப்பகுதி விவசாயிகள் ஆதரவு தெரிவித்தனர்.

கிறிஸ்தவ அமைப்புகள் சார்பில் பேசுகையில், தேவாலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கல்லறை தோட்டங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரினர், இதை முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என அந்தியூர் செல்வராஜ் தெரிவித்தார், தொடர்ந்து சுன்னத் ஜமாத் பெரிய பள்ளிவாசல் முத்துவல்லி, அரசு உதவி பெறும் மதரசா மாண்புள் ஹசனத் பள்ளிக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றும், பள்ளி கட்டிட விரிவாக்கத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார், கபூர் தான் பகுதியில் செட் அமைத்து தரவும் வலியுறுத்தினார்.

பெரிய பள்ளிவாசல் ஹஜ்ரத் உரையாற்றுகையில், உலமாக்களுக்கு அரசு பல நலத்திட்டங்களை வழங்கி வருவதாகவும், மாதாந்திர ஓய்வூதியம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார், மேலும் ஏழ்மையில் உள்ள உலமாக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா மற்றும் வீடுகள் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார், அனைத்து கோரிக்கைகளும் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தியூர் செல்வராஜ் தெரிவித்தார்.

இறுதியாக, தாராபுரம் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும், புதிய தொழில்கள் உருவாகவும் பழைய தொழில்கள் புதுப்பிக்கவும் அரசு உறுதுணையாக இருக்கும் என்றும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர்கள் தெரிவித்தனர்.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள செய்தியாளர்கள் அறையில், பயன்பாட்டிற்காக புதிய கணினி மற்றும் அதிவேக இணையத்தள வசதியினை கணினி மற்றும் அதிவேக இணையத்தள வசதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில் புதிய கணினி மற்றும் அதிவேக இணையத்தள வசதியை ஏற்படுத்தும் வகையில், நீலகிரி மாவட்டத்தில், அமைந்துள்ள செய்தியாளர் அறையில் புதிய கணினி மற்றும் அதிவேக இணையதள வசதி, கணினி மேஜை மற்றும் நாற்காலி ஆகியவை ரூ.1,11,800/மதிப்பில் வாங்கப்பட்டு இன்று முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்நிகழ்வில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நி.சையத்முகம்மத், மற்றும் செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பழநி உலக நன்மைக்காக ஜப்பானியர்கள் நடத்திய சிறப்பு யாகம்

பழநி, பிப்.26-

பழநியில் உள்ள புலிப்பாணி ஆசிரமத்தில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் உலக நன்மை வேண்டி இன்று புதன்கிழமை காலை சிறப்பு யாகம் நடத்தி வழிபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மலையடிவாரத்தில் போகர் சித்தரின் சீடரான புலிப்பாணி சித்தரின் ஜீவசமாதி மற்றும் ஆசிரமம் உள்ளது. இங்கு இன்று (புதன்கிழமை பிப்.25) காலை உலக நன்மை வேண்டி, ஶ்ரீஶ்ரீசிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள் தலைமையில், ஜப்பானிய ஆன்மிக ஆசான் கோபால் பிள்ளை சுப்பிரமணியன் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஜப்பானிய சிவா ஆதீனம் பாலகும்ப குரு முனி மற்றும் அவர்களது சீடர்கள் 50க்கும் மேற்பட்டோர் சிறப்பு யாகம் நடந்தி வழிபட்டனர்.இதில், ஜப்பான் நாட்டை சேர்ந்தவர்கள் மனமுருகி வேண்டினர். தொடர்ந்து, அவர்கள் பழநி மலைக்கோயிலுக்கு சென்று ‘வெற்றிவேல், வீரவேல், முருகனுக்கு அரோகரா' என, பக்தி கோஷமிட்டபடி தண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்தனர். தொடர்ந்து ஆனந்த விநாயகர், கைலாசநாதர், போகர் சித்தர் சமாதி உட்பட அனைத்து சந்திதிகளுக்கும் சென்று வழிபட்டனர்.





# கிருஷ்ணகிரியில் அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள் விழா

கிருஷ்ணகிரி, பிப் .26-

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கொய்யன் கொட்டாய் கிராமத்தில் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் ஆஜி தலைமையில், ஜெயலலிதா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கேக் வெட்டி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் முன்னாள் கவுன்சிலர்கள் நடுபையன், ராதா சென்ராயன் அதிமுக நிர்வாகிகள் கிளை செயலாளர் சென்ராயன், நாகராஜ், செல்வம், முனுசாமி, எல்.சென்ராயன், சஞ்சய், மாட்ட மந்தை, செயலாளர் சுப்புரு, ராஜேந்திரன், கிளி( எ) லட்சுமணன், நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினம் ஒன்றிய, நகர அதிமுக சார்பில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா



கிருஷ்ணகிரி,பிப்.26-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அதிமுக சார்பில் ஒன்றிய செயலாளர் பையூர் ரவி,நகர செயலாளர் விமல் ஆகியோர் தலைமையில் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்தநாள் விழா காவேரிப்பட்டினம் பேருந்து நிலையம் அருகே சிறப்பாக கொண்டாடப்பட்டது. இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், மாவட்ட மாணவர் அணி செயலாளர் மோகன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அசோக் குமார் எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு ஜெயலலிதா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து இனிப்புகள் மற்றும் 1000 பேருக்கு பிரியாணி வழங்கினார். மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோரஞ்சிதம் நாகராஜ் ,முனி வெங்கட்டப்பன், மாவட்ட மருத்துவர் அணி மருத்துவர் அசோக் குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், ஒன்றிய துணைச் செயலாளர் விக்ரம் குமார், அதிமுக நிர்வாகி நவாப்,நகர அம்மா பேரவை செயலாளர் கார்த்திக், முன்னாள் கவுன்சிலர் கணேசன், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், முன்னாள் பால்வள தலைவர் குப்புசாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் தென்னரசு, மாவட்ட இளைஞரணி செயலாளர் கார்த்திக், அதிமுக நிர்வாகிகள் ஆறுமுகம்,பெரியசாமி, சண்முகம்,மதிவாணன், கணேசன், அபிராமி மதனகோபால் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# துணை வாக்குச்சாவடி மையம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம்



தேனி பிப்.26-

தேனி மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் துணை வாக்குச்சாவடி மையம் அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி. 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி. 200. போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி மற்றும் 201. கம்பம் சட்டமன்றத் தொகுதி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வெளியிடப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதியில் 344 வாக்குச்சாவடி மையங்களும், 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் 359 வாக்குச்சாவடி மையங்களும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியில் 345 வாக்குச்சாவடி மையங்களும் மற்றும் 201.கம்பம் சட்டமன்றத் தொகுதியில் 61601 346 வாக்குச்சாவடி மையங்களும் மொத்தம் 1394 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு வாக்காளர்கள் எவ்வித சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக வாக்குச்சாவடி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 1200 வாக்காளர்களுக்கும் அதிகமாக உள்ள வாக்குச்சாவடி மையங்களில் துணை வாக்குச்சாவடி மையம் அமைக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தேனி மாவட்டத்தில் 1200 வாக்காளர்களுக்கும் அதிகமாக உள்ள வாக்குச்சாவடி மையங்களில், துணை வாக்குச்சாவடி மையம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.மேலும், வாக்குச்சாவடி மாற்றம் தொடர்பான கோரிக்கை குறித்து பெரியகுளம் சார் ஆட்சியர் அலுவலகம் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .பராஜகுமார். வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் திருரஜத் பீடன், வாக்காளர் பதிவு அலுவலர் மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா, வாக்காளர் பதிவு அலுவலர்/ உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் .செய்யது முகமது. வாக்காளர் பதிவு அலுவலர்/தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கவிதா, வட்டாட்சியர் (தேர்தல்) .சுருளி, உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் / வட்டாட்சியர்கள். உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் / நகராட்சி ஆணையாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161